ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணேநம:.

# அன்னதான விளக்கம்.

இது

திருத்தருத்தி - இந்திரபீடம்

ஸ்ரீ கரபாத்திரஸ்வாமிகளாதீனம்

ஈசூர் - ஸ்ரீ சச்சிதாநந்த ஸ்வாமிகள் திருவடித்தொண்டர்

39-வது பட்டாளம் சுபேதார் மேஜராயிருந்த

ஆத்மஞானி

ஸ்ரீ அய்யாக்கண்ணு தேசிகமூர்த்திகள்

மாணவருளொருவராகிய

**தே. அ. சாமி குப்புசாமி அவர்களால்**

இயற்றப்பட்டு,

சென்னை, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்

வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய

மகாவித்வான்

ஸ்ரீமத் - கோ. வடிவேலு செட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

அநுபவாநந்தம்

தி. வேங்கடராயலு நாயுடு அவர்களால்

சென்னை,

கோமளீஸ்வரன்பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை]

1918.

Register Copy Right.

# முகவுரை.

---

## ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் துதி.

### நேரிசை வெண்பா.

வேதாந்தத் துண்மையது வேறல்ல தாமென்று
நாதாந்த நற்சிவனே நானிலத்தில்—போதகன்போல்
சங்கரா சாரியனாய்த் தான்றோன்றித் தாளளித்தான்
அங்கவன்றா ளென்னுமொன் றுமாம்.

தேவப்பிறப்பினும் சிறந்த மக்கட்பிறப்பெய்தப்பெற்ற நாம் சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமையதாகிய அந்தமிலின்பத் தழிவில் வீட்டை யடைவதற்கான கல்வி, தவம், தான முதலிய சாதனம் பலவற்றுள் தானமே சிறந்ததாம். அத்தானத்தை 32 ஆகப் பெரியோர் வகுத்துள்ளாரேனும்,

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி லுலகர்முன் வருகென வுரைப்பார்."

"விஞ்சையுந் தவமுங் கருதினோர் தம்மின்
மேன்மையாந் தானமவ் வாறே
யுஞ்சிடப் புகல்வ னன்னதா னத்தா
லுய்ந்தவர் பயிற்றலா லறிமன்
விஞ்சு தானத்தி லரும்பய னன்ன
மிருவரும் விரும்புவ தனுவாந்
தஞ்சமாந் தான மளிப்பவன் முதன்மை
தாங்கினோ னெனப் புகன்றான்."

"சொன்ன நல்லறந் தனக்கெலாந் தூயநல் லறமா
மன்ன மீகுதல்."

"அன்ன தான மறைந்த வற்று ளதிக மேலாம்" என்னும் ஏதுக்களால், அன்னதானமொன்றே சிறந்ததென விளங்கித்

இருக்கின்றனர். கல்வி, செல்வ முதலியவற்றை உலகெலாம்புகழ வொருங்கடையப்பெற்றவர் * 1. அன்னதானமென்பதியாது? 2. அதனை யார்க்குச் செய்வது? 3. எவ்வாறு செய்வது? 4. ஏன் செய்வது? 5. எக்காலத்திற் செய்வது? 6. யார் செய்வது?

---

* 1. பசித்து வந்தார்க்குத் தன்னிடத்துள்ள ஆகாரத்தைப் பசிதீர இடுவது.

2. சாதுக்களுக்கும், "அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன், பெற்றான் பொருள்வைப் புழி" என்றபடி ஏழைகட்கும், (கண்ணற்ற) குருடர்கட்கும், (கைகாலற்ற) நொண்டிகட்கும், ஆதரவற்ற குழந்தைகட்கும், திக்கற்ற விருத்தர்கட்கும், சக்தியற்ற பலவீனர்கட்கும், திசைதப்பிவந்த செல்வர்கட்குமாம். செய்யாக் குற்றஞ்செய்து சிறைப்பட்ட கொடியோர்கட்கும் அன்னமிடல் வழக்காமெனின், அஃது இன்னாரினியரெனக் குறியாது யார்க்குஞ் செய்தலாம்.

3. புகழையும், எதிர்நலத்தையும் விரும்பாது, பொறாமை பேராசை கோபம் கொடுஞ்சொலின்றி, அகமலர்ச்சியேயன்றி முகமலர்ச்சியோடும் இன்சொற்கூறிச் செய்வதாம்.

4. கிரேதாயுகத்தில் ரத்தத்தையும், திரேதாயுகத்தில் மாம்சத்தையும், துவாபரயுகத்தில் எலும்பையும் பற்றிநின்ற உயிரானது இக்கலியுகத்தில் அன்னத்தைப்பற்றி யிருப்பதாலும், "அன்னமயம் பிராணமயம்" என்ற வாக்கியமே அதனைவலியுறுத்துவதாலும், என்றேயினு மிகுந்த பசிநோய்க்கு அன்னத்தைவிட அவிழ்தம் கிடையா தானதாலும், கற்பத்திலிருக்கும் சிசு முதல் வீயுந் தருணத்தை எதிர்பார்க்கும் விருத்தர் வரையில் வேண்டி நிற்பது அன்ன மாதலாலும், உண்டவர்களை ஜீவகளைமாறிச் சிவகளை யுண்டாகக் கண்டபோது இட்டார்க்கோ ரடக்கக் கூடாத ஆநந்தக்களை யுண்டாவதாலும், அவசியம் அன்னதானம் செய்தல் வேண்டும்.

5. எத்தனையோ அடியார்களையும், தாசர்களையும், உய்விக்கவேண்டி ஹரஹரி பிரமேந்திராதி தேவர்கள் மானிடவுருத்தாங்கி அகாலத்தில் வந்து பிச்சைகேட்டு இரட்சித்தாராதலாலும், அவர்களைப்போலத் தானமீவாரைக் கடவுளர்கள் ஆட்கொள்ளும் கிருபைவைதது எக்காலத்தில் எவ்வுருத்தாங்கி வருவாரோ வாதலாலும், காலவரையறையின்றிப் பசித்தோர்வருங் காலங்களினெல்லாம் அவர்க்கு அன்னதானஞ்செய்தல் வேண்டும்.

6. "சையொத்திருந்தா லையமிட்டுண்" "ஐயம்புகினும் செய்வனசெய்" "இரந்தும் பரிந்திடு" என்னும் ஆன்றோர் வாக்கியப் பிரமாணப்படி உள்ளாரேயன்றி யில்லாரும், யார்க்கும் பசி பொதுவானதால் ஆஸ்திகர்களுக்கேயன்றி நாஸ்திகர்களுக்கும் அன்னதானம் செய்தல் வேண்டும்.

7. செய்தாரடையும் பயன் யாது? 8. செய்து பயன்பெற்றார் யாவர்? 9. செய்யார் அடையும் தீது யாது ? என்பனவற்றை யெவ்வளவும் எக்காலத்திலு மெண்ணாது தேகமே ஆத்மா, போகமே முத்தி, கண்டதேகாட்சி, உண்டதே யுணவு, கொண்டதே கோலமெனப் பண்டைய வேதாகம புராணேதிகாசங்கட்கு விரோதமாய் உண்மை ஞானமுடையவர்க ளருவருக்கத் தமது மனசாட்சிக்கு மாறாகக் காலங்கழித்து வருகின்றனர்.

முற்பிறப்பிற் செய்த நல்வினையால் செல்வத்தை இப்பிறப்பிற்பெற்று இரும்பூதோடு வாழ்பவர்களும், ஊழியம் செய்து கஷ்ட ஜீவனஞ்செய்பவர்களும், தத்தம் குடும்பத்திற் கான செலவுகளைச் செய்துகொண்டு காலந்தள்ளுகின்றனரா வென்று பார்த்தால், அவ்வாறு செய்துவருபவர் கிடைப்பது துர் லபமென்றே சொல்லலாம். எப்படியெனின்,

சிலர் சுவல்ப கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள மனந்தராமல், பிடிவாதங்கொண்டு கோர்ட்டு முதலான நீதித் தலங்களில் வழக்குத் தொடுத்து அபரிமிதமான பணங்களை யிழக்கின்றனர்.

சிலர் தமக்கு முக்கியமான அறிவைச்சாப்பிடும் நறவைச் சாப்பிட்டு அவலராகின்றனர்.

---

7. "கொடுத்துவைத்த வரையில் எடுத்து வைத்திருக்கும்" "இட்டார்க் கிட்டபலன்"என்றபடி 4 வகையான வுணவை 6 சுவைக் கறிவகைகளோடு புசிக்கும் பெருஞ்சம்பத்துடையவர்களாயும்,"அன்ன மொருவலை யாமொரு பட்சி,அன்ன வலையில் ஆரன்வந்து சிக்குவான்,அன்ன மெங்குண்டு ஆனு மங்குண்டு"என்றபடி ஆனருட்குப் பாத்திரராயுமாவர்; 'இட்டார் பெரி யோர்' என்னும் புகழிற்கு முரியராவர் ; உணவை விரும்பிவரும் பெரி யோர்கள் நன்னிலைமையைப் போதித்துப் பிறப்பிறப்பென்னுந் துன்பக் கடலினின்றுங் கரையேறும் வழியைக் காட்டக் கண்டுகொள்ளும் புண்ணி யர்களுமாவர்.

8. இளையான்குடிமாற நாயனார், பொன்னனையார், கபீர்தாசர், துளசி தாசர் முதலிய எண்ணிறந்த பக்த கோடிகளும், பிரபுக்களுமாவார்.

9. இன்னவிடத்தில், இன்னவேளையில், இன்னார் மூலமாக இவ்வளவு கிடைக்குமென்னும் நம்பிக்கையற்றுக் கைகால் சோர்ந்து, உள்ளமடுங்கி, தேகங்குறுகி, வாய்குளறி, நல்லறிவுமாறிப் பலவிடத்துமுழன்று கைக்கெட் டியது வாய்க்கெட்டாமல் வருந்தி, உண்டும் உண்ணாமல் சதாகாலமுந் துக் கித்துச் சாவர்.

சிலர் பயாஸ்கோப்பு, நாடகம், சர்க்கஸ், ஜாலம், கச்சேரி முதலான வேடிக்கைகளைப் பார்க்க விரும்பி வாய்த்தவிடம்போய் அடுப்பு நெருப்பும் போனதென்பதொப்ப, துட்டைச்செலவழித்துத் தூயவுடம்பைக் கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

சிலர் மனையாள் தனித்திருந்து மனம் வருந்த, கொடிய வியாதி, தரித்திரம், அகௌரவ முதலிய பல கெடுதிகளைச் சடுதியிற்றரும் வேசிகளுக்குத் தம்பொருளைத் தாரைவார்த்து, கூத்திக்கிட்டுக் குரங்கானான், வேசிக்கிட்டு விழலானான் என்னும் பட்டங்களைப் பெற்றுப் பாழாகின்றனர்.

சிலர் யாம் ஆசாரமுடையோமென்று சொல்லி நடித்துப், காலட்சேபம் பிரசங்கம் உபந்நியாசங்களின் மூலமாக ஆசாரங்களைப்பிறர்க்குப் போதித்தும், கல்வி அறிவு அந்தஸ்து அதிகாரம் குலவொழுக்க முதலியவற்றைப் பொருட்படுத்தாமல பார்ப்பார் பத்திரா னென்றெண்ணிக் கொள்ளட்டும் என்று கருதித் தாடி விபூதி உருத்திராக்கம் துளவமணி திருமண் முதலியவற்றைத் தரித்தும், நாணமின்றி வேலைக்காரர்களையும் மனையாள் முதலாயினோரையும் நம்பாமல் மச்ச மாம்சங்களை வாங்கிச் சுமந்து கொண்டு வந்து உடனிருந்து சமைத்து சாதம் கறியளவாகவும் கறி சாதமளவாகவும் விலாப்புடைக்கவுண்டுப், மேதுதர நையப் புடைக்கத் தூக்கத்தைத் தொழுக்க வைக்கின்றனர்.

சிலர் விதம்விதமான சூதுகளாடித் தோல்வியடைந்து பாதகராகின்றனர். சிலர் தந்தம் வருவாயையும் அந்தஸ்தையும் கவனியாமல் விலையுயர்ந்த ஆடைகளை வாங்கி வருஷத்தில் வண்ணானை எட்டு மாதமும் தாம் நான்கு மாதமுமாகக் கட்டி நட்டப்படுகின்றனர்.

கோட்டுமது வேடிக்கை கூத்தி புலால்சூது
வேட்டுக் கழிப்பர் விதாவாய்க்—காட்டியுடன்
அன்னமிட் டேழை யரும்பசியை நீக்குவரேன்
றுன்னக் குருநடனவா ரோர்.

என்பதை ஞாபகத்தில் வைத்து வீண் செலவுகளைச் சுருக்கி, "இல்வாழ்வோரு மிட்டுண்மின்" என்னும் ஔவைப் பிராட்டியார் திருவாக்கினைக் கவனித்து, "சங்கில் வார்த்தால் தீர்த்தம் செம்பில் வார்த்தால் தண்ணீர்" என்றதுபோல அன்ன

தானத்தில் தம்பொருளைச் செலவழிப்பவர்க்கு அவ்வளவுக் கவ்வளவு பகவான் புண்ணியத்தையும் செல்வத்தையும் வளரச் செய்வாரென்பது திண்ணமாம்.

" இரையவித்து நீராட லாகா துரைப்பார்
உரையவித் தொன்றுஞ்சொ லில்லை—யரையரைச்
செய்துமா மென்னினு மாகா துளவரையால்
செய்தவர்க்கே யாகுந் திரு" என்னும் முதுமொழி பழுதாமா? இக்காலத்தில் தனவந்தரா யிருப்பவர் முற்பிறப்பில் அன்ன தானஞ் செய்தவரென்பதையும், அதனைச் செய்யாதவர் ஏழைக ளென்பதையும்,

" மண்ணார் சட்டி கரத்தேந்தி மாநாய் கவ்வுங் காலினராய், அண்ணாந் தேங்கி யிரப்பாரை யறிந்தோ மறிந்தோ மம்மம்மா, பண்ணார் மொழியார் பாலடிசில் பசும்பொற் கிண்ணத்துப் பரிந் தூட்ட, வுண்ணா நின்ற போதொருவர்க் குதவா மாந்த ரிவர் தாமே" என்னும் பாசுர முணர்த்துமன்றோ? இத்தகைய மகிமை வாய்ந்ததாய் எத்தானத்தினுஞ்சிறந்த வுத்தமதானமானதாயுள்ள இவ்வன்னதானத்தைச் செய்து அதனாலாம் புண்ணியத்தைப் பெறாது அவலனானேனே யென்று பலகால் சிந்தித்த சிந்தனை முற்ற, சற்குருநாதனருளைவலே முன்னிட்டு இந்நூலை யான் செய்ய வந்தேனே யல்லாமல் கல்வியாளன், பொருளாளன், தயா ளன் என்பவற்றைக் காட்டிக்கொள்ள முன் வந்துள்ளேனல் லேன்.

இலக்கண விலக்கியங்க ளிருந்தவூரினுங் குடியிருந்தறி யாத அடியேன் அவாமிகுதியாலெழுதிய இந்நூலிலுள்ள எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்ற முதலியவற் றைக் கைம்மாறுகவாத காரதுபோலுதவுங் கருணா மூர்த்தி யாய், இவ்வுலகுய்யும் வண்ணம் நகரந்தோறுந் தம்மை விரும்புகின்றவாது குலக்குற்றம், குணக்குற்றம், பொருள் வரவு, கல்விக்குறைவு முதலியவற்றை நோக்காமலும், சிரமம் பாராட்டாமலும், புகழை விரும்பாமலும் சென்று சரியையாதி நான்கு பாதங்களையும் அங்கை நெல்லிக்கனியென அன்னா

தேக விபரீதமற அவர்களுக்குப் போதித்து ஞானதாதாவென்னும் புகழுடம் புற்றவராய், எனது சற்குருநாதராய், "லோகோபகாரி" "சக்ரவர்த்தினி" இப்பத்திரிகைகட் கதிபரா யாசிரியராய், இந்து தியலாஜிகல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதராய், வேதாந்ததர்க்க போதகாசிரியராய் விளங்கும் மஹாவித்துவான் ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் களைந்திதனைச் சீர்செய்துதந்தனர்; அவரது திருவடிகளை மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றனன்.

இதனைத் திருத்தமாக அச்சிட்டுக்கொடுத்த சச்சிதாநந்த அச்சியந்திர சாலையாரவர்கட்கும்,

தத்தம் வித்வத்திறமையால் இந்நூலும் ஒரு நூலாகவுலகத் துலாவவேண்டி அன்போடு அரங்கேற்றஞ் செய்த வித்துவான்களுக்கும், யான் மனப்பூர்வகாக வந்தனஞ் செய்கின்றேன்.

தே. அ. கு.



# சாத்துக்கவிகள்.

நியாயசந்திரரும், வேதாந்த பாஸ்கரரும்,
ஸ்ரீ ஆன்மபுராண ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை முதலிய
நூல்களின் மொழிபெயர்ப்பாசிரியருமாகிய
ஸ்ரீ வீர. சுப்பைய சுவாமிகளவர்களியற்றிய

**எழுசீர் விருத்தம்.**

மோனமா நிலையை யடைந்துநிற் றிருக்தி முடிந்திட லனுபவ மறிவோர்க், கானதே போல வெவர்க்குமே திருத்தி யாக்கிட லன்னமா தானந், தானமா மெவற்றுஞ் சிறந்ததென் றறைந்தார் தவமிகு பெரியவர் மிகவே, யானதே யுலகி லரியவர் புரிந்தா ரதுதனை விளக்கமாக் கிடவே.

அன்னநற் றான விளக்கமென் னூலை யரிதினிற் பயந்தனன் புரிந்தே, இன்னறுங் குணத்தா னேழைகட் கிரங்கி யிசைமிகத் திசையெலாம் பரப்பித், தன்னிய ஞான சாமியாங் குப்பு சாமியென் றிடமிகத் தக்கோன், நன்னிலை பெருக மாமுகத் தொளிரு நாயக னற்றிரு வருளால்.

---

காஞ்சீபுரம் -
ஸ்ரீமத் - நிச்சல - இராமாநந்த சுவாமிகளவர்களியற்றிய

**எண்சீர் விருத்தம்.**

நன்னிலைசே ரருண்மலைமென் டிக்கனைத்தும் வீசு
நாதாந்த னடியவர்க்கு நன்மணைக்கந் திக்கும்
பொன்னுலகு புகழ்மணமும் போதமணம் பரவும்
பொய்யறமெய்ப் பொருளறிந்து பொருந்துமண நாறுந்
தன்னைநிக ரத்துவிதத் திருமணமு மணக்குந்
தனியருளார் சாமிகுப்புச் சாமியெனும் பெயரான்
மன்னுமன்ப னனதான விளக்கமெனு நன்னூல்
வாய்மலர்ந்த வெண்பாவா மாமலர்க ளிடத்தே.

---

ஷை. சுவாமிகளவர்களின் பாதசேகரர்

ஸ்ரீமத்-சொரூபாநந்தமணி சுவாமிகளவர்களியற்றிய

எண்சீர் விருத்தம்.

திருவிளங்குஞ் சிவஞான சித்தியெலாம் விளங்குஞ்
சின்மயராய் விளங்கடியார் கருணையது விளங்கும்
பொருள்விளங்கு மெய்யறிவாம் போதசுகம் விளங்கும்
பொன்னாட்டின் வாழ்வனைத்தும் பொய்யெனவே விளங்கும்
தெருள்விளங்கு மத்துவிதா நந்தசுகம் விளங்குஞ்
சிற்சுகனுஞ் சாமிருப்புச் சாமியெனுஞ் சீரா
னருள்விளங்க வளித்தவன தானவிளக் கத்தா
லடைமகிமை யென்னுளிங் கறிந்துரைக்கற் பாற்றோ.

---

சிவரகசியப் பதிப்பாசிரியர்

ஸ்ரீமத் க. சதாசிவ செட்டியார் **B. A.** அவர்கள் எழுதிய

வசனம்.

ஸ்ரீமான் சாமிருப்புசாமி என்பவரால் செய்தனுப்பப்பட்ட "அன்னதான விளக்கம்" என்னும் புத்தகம் வரப்பெற்று உவந்தேன். இவர் அன்னதானத்தை அநுதினமும் அநுசரித்து உபகரிப்பவராய் அதனைப் பிறரும் மேற்கொள்ளுமாறு இந்நூல் வாயிலாகப் போதிக்க முன்வருதலின், இவர் செய்கை வாசா கயிங்கரிய மாவதன்று. அன்னதானம் ஏற்போர்க்குப் பசிப் பிணிமாற்றி இன்பம் பயத்தலின், ஈவோர்க்கு இம்மையில் கீர்த்திப் பிரதாபங்களும், மறுமையில் புருடார்த்தங்களும் ஒருங்கே தருதலின் எல்லாத்தானத்திலும் மேலானதாம். இத்தகைய பேறறத்தை விளக்க வெழுந்த விந்நூல் போற்றப்பட வேண்டியதே. இந்நூலுள் அமைந்த வெண்பா யாவும் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலென்னும் வகையில் சொற்சுருங்கி, பொருள் பல்கி இலக்கண அமைதிபெற்றுப் படிக்கப்படிக்க இன்பம் பயக்குந்தன்மையவாய் இருக்கின்றன. இம்முயற்சி பலவகையிலும் மெச்சத்தக்கது. இந்நூல் என்று நின்று நிலவுமாறு ஸர்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றனம்.

---

சென்னை, ஸ்ரீ கந்தசுவாமி கோயில் தருமகர்த்தரும்,

ஸ்ரீ கச்சபேசுர சுவாமி தேவஸ்தான டிரஸ்டியும்,

ஸ்ரீ உமாமகேசுவரர் தமிழ்வேதபாராயண பக்த ஜனசபை

பிரசிடெண்டும்,

ஸ்ரீ தர்மசிவாசாரியார் மடம் கமிட்டி மெம்பரும்,

வைசியகுல பேரிசெட்டிமார் சங்க மானேஜிங் கமிட்டி

மெம்பருமாகிய

ஸ்ரீமத் - பழவை - இரத்தினசபாபதி செட்டியாரவர்கள் எழுதிய

வசனம்.

ஆழிசூழ்ந்த இவ்வவனிமீதினில் அறத்தாறு, ஒருபொருள் ஈட்டிய ஒருவன் அப்பொருள் வைப்புழி அற்றவர் அழிபசி தீர்வழி என்பதருமறை. ஆற்றுமாக்கள் அரும்பசிகளைவோர் மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை என்றனர் மேலோர். அம்மெய்ந்நெறியே கூறும் இந்நூல், சோறிட்டார் பெற்றபலன் சொல்லரிதாம் என்னும்; அன்னதானமே பன்னுதானம் பலவற்றினும் பரமதானங்காண் என்னும்; என்னை? ஊன் உயிர்க்கும் உறுப்பொடு தோன்றி வயிறுகாய் பெரும்பசி வருத்தும் மாக்கட்கு வெயில் சுடவெம்பிய வெய்யகானகத்துக் கருவி மாமழை போன்றதன்றோ இத்தானம்? ஈதன்றோ தலையாய அறம்? இஃது உயிர்க்கொடை யன்றோ? மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே. அவ்வறமேவார் திறமன்றோ இவ்வறநூல் கூறுவது? உரைப்பார் உரைப்பவையும் அவையே யன்றோ? வெள்ளவேணி விமலனார்க்கு உள்ளன்போடு மெய்யடிமை பூண்டு அசனமளித் தகமகிழ்ந்த வசவனையோரை ஈங்குரைத்ததும், எவ்வுயிருந்தாமாக எவ்வமறக்கண்டு ஆருயிர் மருந்தாம் அன்னமளித்த உயிர்க்கொடையாளர் இசைவிளக்கினதன்றோ? ஆகலின், பசியென்னுந் தீப்பிணிமாற்றுவார் ஆற்றலைப் பன்னூலும் ஓர்ந்து பகுத்துரைத்தார் இந்நூலில் சாமிகுப்பு சாமிக்குரிசில். அவர் இயற்றிய இவ்வறநூல் வழிநிற்பார் செல்லுந்தேஎத்துக்குறுதுணை தேடுவாரென்பது சொல்லவும் வேண்டுமோ?

புதுவைத் தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசியும், தமிழ்மகவை உபபத்திராசிரியருமாகிய தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமத் வீ. துரைசாமி முதலியாரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

பூவுலகி லன்னமிடும் புண்ணியத்தி னற்பொலிவைத்
தூவுரை யின்விரித்துச் சொற்றனனால்—மேவுபுகழ்க்
குப்புசா மிக்குரிசில் கூறுபுவி யோர்மகிழ்ந்து
செப்புவா ரன்னவன்றன் சீர்.

புதுவை ஆநந்தாஸ்ரம சாது மகாசங்கத்தின்
உபநாயகர் ஸ்ரீமத் ஜெகந்நாத நாயுடவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

அயலாய் விளங்குவதை யாராய்ந்து பார்த்துச்
சுயவறிவே யென்று துணியத்—தயவுடனே
அன்ன மிடுங்க ளானடியைப் பேணுங்க
ளென்னுஞ் சுருதி யிசைந்து.

அச்சுருதி கூறுகின்ற வன்னதா னந்தன்னை
மெச்சி யொருவிளக்க மோதினான்—அச்சமிலாச்
சாமிகுப்பு சாமியெனுந் தன்னிலக்க ணம்வல்லான்
நாமிதனை யேற்றிடுவா நன்கு.

சித்தந் தனிலுள்ள தீங்கெல்லாம் போக்கியதைச்
சுத்தப் படுத்திச் சுகமாக்கச்—சித்தத்தில்
எண்ணுவா ரிந்நூலை யெங்கேய முஞ்சிந்தை
பண்ணுவார் மிக்குப் பரிந்து.

புராணிகர்
ஸ்ரீமத் - தேவாரம்-சி - சம்பந்த முதலியாரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

பசுபதி மணிக்கின் மீளாப் பதம்பதி யளிக்கு மேன்மை
புசிப்பா மன்ன தான விளக்கமென் றொருநூல் வையத்
திசைபெற வுகற்ற பானு நிலவுபா லுலவத் தந்தா
னசைபத முணர்ந்த சாமி குப்புசா மிக்கோ னன்பால்.

சம்பத்கிரி பிரமபீடம் -
ஸ்ரீ அச்சுதாநந்தசுவாமி யவர்களின் மாணவர்
கஸ்தம்பாடி - ஸ்ரீமத் - முத்துக்கிருஷ்ணதாச ரவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

தானத்தின் மிக்கதெனச் சாற்று மெழிலன்ன
தானத்தின் றன்மை தனைத்தெரித்தான்—ஞானத்தின்
தக்ககலை யாவுந்தேர் சாமிகுப்புச் சாமியெனு
மிக்கவனிங் கார்க்கும் விரித்து.

---

ஷை சுவாமியவர்களின் மாணவர்
களர்—ஸ்ரீமத் - ஆ - கங்காதர முதலியாரவர்களியற்றிய

### எழுசீர் விருத்தம்.

உலகில்வா ழுயிர்கள் பவப்பிணி யொழிதற்
குற்றநற் சாதன மாகு
நலமிகு மன்ன தானநல் விளக்க
நல்கினான் கற்பவர்க் கெளிதாய்க்
கலகமிக் குடைய பொறிபுலச் சேட்டை
கழிந்துதன் னிலையுணர்ந் தறிவா
யிலகுறு சாமி குப்புசா மிப்பே
ரேந்தனற் சென்னைவாழ்க் கையனே.

---

ஷை சுவாமியவர்களின் மாணவர்-வித்துவான்
வல்லநகர் - ஸ்ரீமத் - வைத்தியலிங்கம்பிள்ளையவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

ஞான விளக்கமுறு நற்குப்பு சாமியன்ன
தான விளக்கந் தனையுதவி—யீன
ருதவா ரகத்திருளை யோட்டிவாழ் வித்தா
னிதவா சகத்தா னிசைந்து.

---

களம்பூர் - வித்வான் -

ஸ்ரீமத் - சே - செல்லப்பமுதலியா ரவர்களியற்றிய

**நேரிசை வெண்பா.**

தன்னைநிகர் சென்னைநகர் தன்னிற் சிறப்புடைய
பொன்னைநிகர் குப்புசா மிப்புகழா—னன்னைநிகர்
சார்ந்தவன்பா லீண்டன்ன தானவிளக் கப்பெயர்நூ
றோர்ந்தவெண்பா வாற்றந்தான் செய்து.

---

திருநதிக்குன்றம் - ஸ்ரீசண்முகாநந்த நிலையத்தலைவர்

ஸ்ரீமத் - சு - கு - அரிபுத்திரபிள்ளையவர்களியற்றிய

**நேரிசை வெண்பா.**

பன்னு கலைபுணர்ந்த பாவலரெ லாமேற்க
அன்னதா னத்தீவ மாக்கினா—னன்னலஞ்சேர்
சென்னை நகரிற் றிகழுங் குணவாளன்
மன்னுகுப்பு சாமி மகான்.

---

காமக்கூர் - தமிழ்ப்பண்டிதர் - ஸ்ரீமத் - சுந்தரமுதலியா ரவர்களின் மாணவரும்,

ஐயம்பேட்டை — உபாத்தியாயருமாகிய

ஸ்ரீமத் - நா - முனிசாமிமுதலியாரவர்களியற்றிய

**சந்தவிருத்தம்.**

பன்னி டும்பொரு டோன்ற நயமொடு பாரில் யாவரு முய்யவே
யன்ன தானவி ளக்க மென்னுமோ ரரிய நூலை யளித்தனன்
இன்ன றீர்தரு சென்னை யில்வள ரெழி லுறுங் குப்பு சாமியாந்
துன்ன ரும்பர ஞானி யான்புகழ் சொல்லு தற்கரி தாமரோ.

---

களம்பூர் - போர்டிஸ்கூல் உபாத்தியாயர்

ஸ்ரீமத் - பழனிவேற் பிள்ளையவர்களியற்றிய.

அறுசீர்விருத்தம்.

அளக்கரிய பெருமையெலா மவனியின்மே னறிந்துய்ய வன்ன தான, விளக்கமதை வெண்பாவான் வியனயங்கண் மிகவிளங்க விரும்பிச் சொற்று, னுளக்குற்ற மொருசிறிது முற்றிடா துயர் நூல்க ளுணர்ந்தோன் சென்னை, விளற்கரிய சாமிகுப்பு சாமி யெனு மபிதான விழுமி யோனே.

காமக்கூர் - சுந்தரக்கல்விச்சங்கம்

முனியகசுர் - ஸ்ரீமத் - சந்திரசேகரப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்.

தலையான தானமிது வென்னவுல கோரறியத் தகுநூ லாய்ந்து
நிலையான வன்னதா னத்தீவ மொளிநிரம்பி நிலவத் தந்தான்
அலையான வாரிதிசூ ழவனிபுகழ் சென்னையினி லழகாய் வாழுங்
கலையான சாமிகுப்பு சாமியெனுஞ் செய்யதமிழ்க் கவிஞன் [மாதோ.

தென்பட்டிணம்

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

சாமிகுப்புச் சாமியெனுந் தக்கோனு நாவலவ
னமி தழுகிதென வாழிசூழ்—பூமியுளார்
போற்றனதா னம்விளக்கம் பொற்பாக வேசெய்து
சாற்றினனே மெய்ஞ்ஞானஞ் சார்ந்து.

வித்தியாவதானம்

ஸ்ரீமத் பிரம்பை - பொன்னுவேற்பிள்ளையவர்களியற்றிய

எழுசீர்வண்ண விருத்தம்.

ஆறுமறை நான்கொருங்கு தானுரைசெய் தானந்தம்மு
ளானமுதற் றானமென்ன வறைவாரே
சீலவன தானந்தன்னை நாளுமிதை யேவிரும்பித்
தேடிபல வேழையுண்ண விடுவானே
மேலவர்க ளேபுகழ்ந்து கூறுவன தானமென்னு
மேன்மைமிகு மோர்விளக்கந் தருவோனே
தாலமதிற் றேனைவந்த சாந்தகுண மேருவென்னுஞ்
சாமிகுப்பு சாமியெங்கள் குரவோனே.

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நமஃ

# அன்னதான விளக்கம்.

## பாயிரம்.

### விநாயகர் வணக்கம்.

ஆனை முகத்தோனை யாரறிவாக் கண்டன்ன
தான விளக்கத் தருநூலை—யேனையரும்
பொல்லா மனமகற்றிப் போற்றற்கா விங்களித்தேன்
வல்லான் கருணைபெற வந்து.

### சொரூப வணக்கம்.

வாசாம கோசரமாய் வாக்குமன மில்லாதா
யாசாபா சம்மற்ற வாரறிவைப்—பேசார்
சொரூபமெனக் கண்டியான் தோத்தரித்தே னென்றுஞ்
சொரூபவணக் கம்பீதே சூழ்.

### சபாநாதர் வணக்கம்.

சிதம்பரமாம் பொற்சபையிற் செய்யதா ணோக்கி
விதம்விதமா வன்பர் வினைக்காப்—பதமா
நடம்புரியு நாதன்ற னற்பதத்தைப் போற்றி
யடமகற்றிப் போற்றுநெஞ்சே யாய்ந்து.

### பரமாசிரியர் வணக்கம்.

இந்திரபீ டத்தராசா வேத்துசச்சி தானந்த
வந்தமிலா வென்பரம வாசிரியன்—பந்தமிலாப்
பொன்னடியை வேண்டிப் புனிதவனை தானமதைச்
சொன்னேனோர் நூலாய்த் துணிந்து

### ஆசிரியர் வணக்கம்.

வேதத்தி னுச்சி விளைவே குருவடிவா
வேதமற வந்தெ னிழிவினையைக்—காதலுடன்
போக்குமையாக் கன்னளித்த புண்ணியர்க்கா யிங் ...

## மகான்கள் வணக்கம்.

சுத்தபர ஞான துரியநிலை கண்டோர்கள்
பத்தருரை தட்டாத பத்தினிகள்—முத்த
ரடிபணிந் தேத்துதிக்கு மன்பரன மீவோ
ரடிபணிந்தே னுள்ளமகிழ்ந் தாய்ந்து.

## நூற்பயன்.

ஆடவனு மாடவளு மன்புளமொத் தன்னமிடிற்
றேடமற வீசனரு டோய்ந்தென்றும்—வீடமர்ந்து
வாழ்ந்திருப்ப ரிந்நூல் வகுத்தபடி செய்வாரேற்
றாழ்ந்திருக்கா ரெம்மானை தான்.

## அவையடக்கம்.

பசித்தோர்கட் கன்னமிடாப் பாவியிந் நூலைக்
கசியன் புடையேன்போற் கண்டேன்—சசிமுடியோர்க்
கன்பரெலா மாதரிப்பா ராதரியா தென்போல்வார்
வன்மனத்தாற் றுமிழுப்பார் வம்பு.

கற்றவர்கண் முன்னொன்றுங் கல்லா வறிவில்லேன்
பற்றகன்றான் போலிந்நூற் பாடியது—சிற்றெறும்
பாழியா ழங்கண் டடைந்தேனென் றேகூறிப்
பாழி படைத்தொக்கும் பார்த்து.

எம்பெருமான் பாட்டிற் கிசைத்தாரேற் குற்றமொன்று
செம்மையிலர் வெண்கவிக்குச் செப்பாரோ—வெம்மவர்க
ளன்னமிட் டுண்ண வறைந்தநூ லாதலினு
லென்னகுற்றஞ் சொல்வா ரிதற்கு.

ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நம:

# அன்னதான விளக்கம்.

## நூல்.

நல்லசிவ ஞானியரு நன்றென்ப ரிட்டுண்ணல்
சொல்லல்ல வென்னுரையைச் சோதிப்பீர்—செல்வரே
யன்னமிடா ரில்ல மடவியிடு காடென்று
பன்னூலுங் கூறும் பகுத்து. 1

பணப்பற் றுடையநரர் பாராரீ சன்றாள்
பணப்பற் றகன்றோரே பார்ப்பர்—பணத்தினர்தா
மன்னமிட் டுண்ணுவரே லற்றாருங் கற்றாரும்
மன்னப் புகழ்வார் மகிழ்ந்து. 2

அறமெனப் பட்டதே யில்வாழ்க்கை யென்றா
ரறமனைத்து வள்ளுவனா ராய்ந்திங்—கறமே
விரும்பென்றார் நம்மவ்வை மிக்கறத்தைச் செய்வார்
பெரும்பயனைச் சேர்வார் பெரிது. 3

மலைமலையாச் செல்வங்கள் வாய்ந்து மகிழ்வா
ரில்லையென்று தன்ன மிரப்பார்க்—கலைவகற்றி
யிட்டுண்டு வாழ்வாரே வின்பமெல் லாம்பெறுவர்
கட்டுண்ணா ரென்றுங் கதித்து. 4

உண்ணா துடுக்கா துளபொருளா லல்லறங்கள்
பண்ணா திருத்தியென் றன்பாழ்மனமே—யெண்ணான்கு
தொல்லறஞ்செய் யாவிடினுஞ் சொல்லன்ன தானமெனு
நல்லறஞ்செய் தின்பநிலை நாடு. 5

அன்ன மரனுருவ மாமென்றே பன்னூலுஞ்
சொன்னவிவ் வுண்மையினைச் சோதியுங்க—ளன்ன
மருந்தாதார்க் கின்பநிலை யாய்ந்துணர்ந்து காண்மின்
பொருந்துமா றன்னமிடப் போம். 6

அரனடிகண் டார்போ லபிநயித்து நிற்போ
மரனடியைக் காணுமா றேயோம்—பரனுருவ
மன்ன வடிவென் றறியா திருக்கின்றோ
மென்னகதி யாமோ விருந்து. 7

பத்தியுளார் போலப் பகட்டிப் பசித்தவருக்
கத்திக்கா யின்னளவு மன்னமிட்டோம்—பத்தியுட
னன்னமிடு வோமாயி னன்புருவ மாவமிக்குத்
தன்ன முட்பொய் யன்றுண்மை தான். 8

அன்னத்தா லன்றி யருளைப் பெறலரிதா
மன்னமிடா னுக் கருளில்லை—யன்னத்
தகிலம் விளங்கு மறிவெல்லாந் தோன்றும்
பகிரங்க மாயறிந்து பார். 9

அற்றார்க்கொன் றீத லறமாமென் றாய்ந்துணர்வாய்
கற்றுமறி வில்லாத கன்னெஞ்சே—பற்றில்லாப்
பண்டிதரைப் போலப் பகட்டிப் பயனிலை
யிண்டைமுடி யோனடியார்க் கீ. 10

பணங்காக்கும் பூதம்போற் பார்ப்பனரே பொன்னைக்
கணமும் பிரியாது காத்தார்—றுணையோ
தினமுந் தவறாது திக்கில்லார்க் கன்ன
மனமகிழ்ந் தீவதே மாண்பு. 11

மாதருரை கேட்டு மயங்காதீ ரன்னமிட
மாதருரை கேட்பவர்க்கு மாநரகம்—மாதருக்குத்
தன்மயமாய்ச் சார்ந்துறாத் தன்மநெறி சாற்றியே
நன்மையுள நல்லோர்க்கு நல்கு. 12

இடர்பத்தை நாடியனை யிட்டா லுயர் புண்ய
மிடப்பத்தால் வீணுமென் றெண்ணோம்—மடம்பிடவா
யன்னமிட்டுட் டேந்தா லக்குணமே போய்ச் சாந்தகுண
முன்னு மொருதிக்கு முவந்து. 13

கண்ணுங் கருத்துங் கரமுந் துவளாமுன்
விண்ணுலகுங் கண்டு விடாதே—மண்ணுலகில்
கண்டார் வியப்பக் கருணையா யன்னமிட்டா
லண்டா னியமனெறி. 14

எமன் வருமுன்னே யேழைநா மாகுமுன்னே
காமனோ யாதி கலக்குமுன்னே—மாமனையார்
போவென்று கூறவுயிர் போமுன்னே யேழைகளை
வாவென் றனமளித்து வாழ். 15

செல்வமது செல்வமெனச் செப்பாம லேசெல்லுஞ்
செல்லமெனுஞ் சொற்பொருளைத் தேர்ந்தறியின்—செல்வர்
ரில்லையென் பார்க்கன்ன மில்லையென் றுதவிமி [கா
ணெல்லையில்லே ரின்புண் டுமக்கு. 16

பசிபொதுவா மன்றிப் பசியிரண் டில்லை
கசியுமன் பில்லாக் கருமி—பசியென்று
வந்தவர்யா ராயினுநீ மாறு தனமீவாய்
சொந்தஞ் சுவர்க்கந் துணி. 17

அன்னமிட் டுண்பாரை யண்டமெல் லாந்துதிக்கு
மன்னமிட வஞ்சாதி ராரறிவீ—ரன்னமிட்டா
னல்லவர்க ளுண்மதிப்பர் நற்பொருளெல் லாஞ்சேரும்
வல்லநமன் வாதைசெயான் வந்து. 18

பிச்சையிட் டுண்பதற்குப் பின்வாங்கேல் பேய்மனமே
பிச்சையிட்டாற் றீமையெலாம் பின்வாங்கும்—பிச்சையி
நாயாய்ப் பிறந்துழன்று நல்லுணவுக் கேக்குற்றுப் [டார்
பேயாய்த் திரிவார் பிறகு. 19

மாம்பழுத்தாற் பட்சிகளை வாவென்னு முண்ணக்
காம்படைத்து மீயக் கருதாய்—பாம்பரனை
யெங்ங னடைந்திடுவா யென்பெற்றாய் செல்வத்தை
யிங்ஙனே யன்னமிட வெண். 20

என்ன தவஞ்செய்தோ விப்பொருளைப் பெற்றோமென்
றுன்னிப் பிறிது முயர்வெய்த—மன்னு
முயிர்போலப் பொன்னை யுவந்து கரவாமற்
செயிர்தீ ரனதானஞ் செய். 21

நாளை யறம்புரிவ நாளைதவஞ் செய்வமென
நாளைவீ ணாக்காதே நன்னெஞ்சே—நாளைநாள்
நந்நாளோ வன்றி நமனாளோ நீயுணரா
யிந்நாளே யீவதனுக் கெண். 22

அருளினமன் றாத ரருளிலுனைப் பற்ற
மருளுவங் கொண்டு வருவா—ரருளுற்றே
யற்றவர்க ளுண்ண வனமீந் தானருளாற்
பற்றகன் றுய்ந்திடவே பார். 23

சேத்த பிறகுநீ சேர்த்துவைத்த பொய்ப்பொருளை
யுத்தமமா நல்லறத்தி லுய்ப்பரோ—புத்திகெட்டுக்
கள்ளுநெஞ்சுள் ளோடு கபடவிலை மாதருக்குந்
தள்ளுவரோ யாதோ தமர். 24

உண்ணா துடுத்திடா தோரறமுஞ் செய்திடா
தெண்ணா தனவெண்ணி யிப்பணத்தைக்—கண்ணினாற்
பார்த்திருந்தா லென்ன பயனும் பசித்துடலம்
வேர்த்துவந்தார்க் கீய விரும்பு. 25

மானிடரா யுற்று மாமிருகம் போலிருந்தான்
மானிடர்நா மாவமோ மண்ணுலகில்—மானிடரா
வானதனுக் கேற்ப வறமனந்தஞ் செய்ததனால்
ஞானதனுப் பெற்றிடலே நன்று. 26

இருந்தாற்போ லிவ்வுடல மேகுமந்தோ நெஞ்சே
விருந்தினர்வந் தால்வெறுக்க வேண்டாம்—விருந்தினரை
யாரென்று பார்த்தா யரனன்றோ மோகமற்றுப்
பாரொன்று நல்லறத்தைப் பற்று. 27

செழும்புனலிற் றேரை செழித்துவாழ்ந் தாலும்
வழும்பறா வாறுகீழ் மக்கள்—செழும்பொன்றே
டுற்றாலும் லோபமறா ரூமரிவ ரென்பிறந்தார்
பற்றியன மீவதுவே பண்பு. 28

இறப்பதுண்மை யென்றே யெளியோர் தமக்கு
மறப்பின்றி யிட்டுண்டு வாழ்வார்—மறப்பற்றுப்
பண்டைமறை போற்றும் பரவடிவைத் தம்முளத்திற்
கொண்டுசீ ராவார் குறித்து. 29

அறம்புரிவா ரீச னடியடைவ துண்மை
யறமாவ திதலே யாமித்—திறமுணர்த்த
யன்னமே யீந்தா ளறநா யகியிதனைச்
சொந்தமெனச் செய்வாய் துணிந்து. 30

அழிசெல்வத் தாற்செருக்குற் றற்றார்க டம்மை
யிழிசொல்லா லேசாதீ ரென்று—மழிபொருளாற்
கெட்டவர்கள் கோடி கெடுமதியாற் பல்பிறப்பிற்
பட்டவர்க ளெண்ணினெஞ்சே பார். 31

ஏழைகளைக் கண்டா லிரங்கி யிசைந்தமட்டுங்
கோழைமன மின்றிக் கொடுப்பாயே—லூழைக்
கெடுத்தகற்றி மீசன்றன் கிஞ்சுகப்பொற் பாதக்
தடுத்திடவே செய்வா னறி. 32

வேதஞ்சொன் மார்க்கம் விளம்புமிடத் துப்பலவாம்
வேதத்தூ னூட்டல் விளக்காகுங்—கோதகல
வேழைக்கூ ளீவார்க் கிரும்பதவி தந்துபிரா*
னூழையற வேயொழிப்பா னோர். 33

அன்னதா னத்தா லடையலா நற்சிவத்தை
யன்னதுசெய் யாதா ரடைதலிலை—சொன்னேன்
சிவமறிய முக்காலுஞ் சிற்றுரையென் றெள்ளீர்
பவமறுத்தல் சோறிடலின் பண்பு. 34

பன்னுதா னத்துட் பரமதா னந்தூயோ
ரன்னதா னம்மென் றறைந்திட்டா—ரன்னதனை
மேற்கொண்டு செய்திடுவார் மேலாம் பதமடைவ
ரேற்குமா றெல்லா மிசைந்து. 35

அன்னமிட்டு மாறனு ரானுக் கதிபெற்றா
ரன்னமிடும் புண்ணியத்தை யாரறிவார்—பன்னரிய
புண்ணியத்துட் புண்ணியம் பெற்றவர்கள் புற்கையது
தண்மையுட னீந்தவர்க டாம். 36

நம்பொருணம் பூமிமனை நம்மக்க ளென்றுநம்பி
வம்புவழக் கிற்கே வழிவகுத்தி—டம்பச்
செலவிட்டுக் கெட்டாய் சிரிக்கின்ற நாயே
செலவிட் டனதானஞ் செய். 37

தருமநூ லெல்லாந் தவறாது கற்றுந்
தருமஞ்செய் தற்கென் றளர்ந்தாய்—தருமநூல்
கற்றாய் கடைபரப்பிக் காலற் குடல்வளர்க்கப்
பெற்றாயீ தாலென்ன பேறு. 38

பிச்சையிடா ருண்ணுமனம் பேசுமி டத்துவிடம்
பிச்சையிட் டுண்ணன்னம் பேரமுதம்—பிச்சையிடக்
கல்லாது நூல்கள் கடைபோகக் கற்பார்க
ணல்லவரோ தீயவரோ நாடு. 39

புண்ணியத்தால் வந்த பொருளைப் புதைத்துவைத்
தெண்ணித் துயர்கொள்ளு மென்மனமே—கண்கெட்டுப்
புத்தியற்று யந்தோ புதைத்தபொருள் யார்க்குதவு
மெத்திறத்து மன்னமிட வெண். 40

வாழ்வா வதுமாய மென்றுரைத்த நல்லோர்சொ
லாழ்வினையா லேயறியா தோகெடுவா—யாழ்ந்தறியா
நாறுடலுக் கூட்டிவர லென்றன்று நல்லார்போல்
பேறுறுதற் காமோ பிறகு. 41

பணமில்லார் பிச்சையிடப் பார்ப்பாரெந் நாளும்
பணமுள்ளா ரெப்பயனும் பாரார்—பணமுள்ளா
னற்றவருக் கிந்திங் கரனடியைப் பூசித்துக்
கற்றவர்க்கு மீதல் கனம். 42

வரும்பணத்தை யைம்புலத்தும் வாய்ப்பா வழங்கி
வரும்பிறவி மாற்ற வறியா—தரும்பிறவி
பெற்றும்பா ழாதல் பெருமையோ வென்னெஞ்சே
யெற்றுக் கிருக்கின்று யிங்கு. 43

அன்ன மளிப்போர்க் ககிலமனைத் துஞ்சொந்த
மன்னமி டார்க்கெதுவு மன்னியமா—முன்னிநின்று
தன்னை யறிந்தவர்க டாழ்ந்தோர்க்கிங் கன்னமிட்டோ
ருன்னிதனை யென்னெஞ்சே யோர்ந்து 44

பசித்தவர்கட் கன்னமிட்டார் பார்புகழ வாழ்வார்
பசித்தவர்க ளைப்போலப் பார்க்கப்—புசித்துறங்கி
யெள்ளளவே னுங்கருணை யில்லாதா ரேன்பிறந்தார்
தள்ளுவரோ தம்பழியைத் தாம். 45

அன்னமிடு வார்பூ ணரன்வேட நன்றாகு
மன்னமிடார் மேலுக் கழகாகத்—துன்ன
வணிசிவசின் னங்க ளழிபிணமீ திட்ட
பணிநிகர்க்கு நெஞ்சேநீ பார். 46

சாந்தகுண சீலரைப்போற் சாதிப்பார் வேதாந்தந்
சாந்தகுணஞ் சொல்வார்கள் சாதமிடார்—சாந்தமுளார்
சத்தொன்று நெஞ்சுந் தளர்வடையுங் கொண்டுதினம்
பத்தர்க் கனமிடுவார் பார்த்து. 47

தளிக்காசா ரத்தமூழ்கிக் கும்பிடுவா ரன்பா
யளித்துண்ணு வஞ்சகங்கொ ளற்ப—ரளிக்க
மனமில்லா மக்கடா மாமரமற் றென்னே
தினங்கழித லென்பயனுஞ் செப்பு. 48

நாய்க்குவைக்கும் பேர்போல நற்பட்டம் வைத்திருப்பார்
நாய்க்குங் கடையா நடையுடையார்—வாய்த்தவா
றன்னமிடா துன்னுமிவ ரார்க்கா யிருக்கின்றா
ரென்ன பயன்பெறுவா ரேய்ந்து. 49

நாய்க்குள்ள பத்தியுமி ஞாயிற் கடைமனமே
வாய்வளப்பங் காட்டி வழிவிடுவாய்—பேய்க்குணத்தைக்
கொண்டலைந்து தேடுபொருள் கூடவரு மோசொல்வாய்
கண்டறிந் தன்னமிடக் கல். 50

சோறுசோ றென்றுதினஞ் சோர்வார்க்குச் சோறிடலே
பேறுபே றென்றுமறை பேசுவதால்—கூறுகூ
றாக்கன் னதான மன்பாகச் செய்நெஞ்சே
மோக்கதியைச் சேர மகிழ்ந்து. 51

ஐயோ வுயிர்க்கான மன்பாகச் செய்யாம
னய்யா விருக்கநீ நாடுகின்றாய்—பொய்யுடம்பு
மெய்யா யிருக்குமோ நன்றிகெட்ட கீழ்மனமே
பொய்யா பொழிப்பொருளைப் போற்று. 52

அன்னமிடு மில்லத்தி லன்பருற நெஞ்சகப்பா
லென்னவிட ருற்றாலு மேகிடுமோ—வன்ன
மிடாரகத்தி லென்று மிடும்பை வசிக்கும்
விடாதுவசை சேரும் விரைந்து. 53

அன்னமிடக் கல்லாதா ராதிமறை போதியென்றுஞ்
சொன்ன மறைப்பாணைத் துன்னவின்றா—மன்னமிடு
வாரகத்திற் கள்ளர் வருவதிலை யீதுண்மை
சேரகத்தைச் சேர்வார் தெளிந்து. 5

பசியாற்றும் பத்தரிடம் பற்றற்றான் றன்வந்
தசிபதத்தி னுண்மை யறைந்து—நிசவடிவைக்
காட்டி யருளிக் கடைப்பிறப்பை நீறாக்கும்
வாட்டுமோ வல்வினைகள் வந்து. 55

பற்றற்றா ரேழைகடம் பாழ்ப்பசியை நீக்குகின்றார்
கற்றில்லில் வாழுங் கழிசெல்வர்—நற்றவமா
வன்னதா னஞ்செய்யா தந்தோ கெடுகின்றா
ரின்னலடை யாதிருப்ப தெங்கு. 56

பரனடியார் பாதப் பரிசத்தாற் பாவம்
விரைவி லகலுமெனும் வேதம்—பரன்றா
னடியா ருருவமெடுத் தன்னமிடென் றேற்பான்
கடியா தளிமின் கசிந்து. 57

அன்னமி டாதார்க் கடுத்தடுத்துத் தீங்குவரு
மென்னமொரு ஞற்றாலு மின்பமுறா—ரன்னம்
பசித்தோருக் கீயாதார் பாழாம் பணந்தான்
வசிக்கரா கங்காட்டும் வாய்ந்து. 58

வேதமொடு நீதி விகற்பமறக் கற்றிருந்துஞ்
சாதமிடக் கல்லாச் சதிகாரப்—பாதகர்தாங்
கோதில்வாக் குள்ளாராய்க் கூறுகின்றார் சன்மார்க்க
மேதிவர்க்கு வந்துதவு மேய்ந்து. 59

தம்பொருளை யீயாமற் றூவென்றேற் றன்னியர்பா
றப்பொருளைப் போற்றுமக் காஞ்செய்யும்—வம்புடையா
ரென்பெறுவா ரந்தோ விதமவர்க்குண் டாகுமோ
பொன்னெஞ்சே வன்னமிடப் போ. 60

உடல்பொய்யா மென்றுணர்ந்தா ருற்றபொரு டன்னை
விடல்வேண்டு மென்று விரைந்து—கடல்போல
வன்னதா னஞ்செய்யு மன்பருடன் கூடிநின்று
சொன்னவறஞ் செய்வார் துணிந்து. 61

எண்ணிப் படிக்கின்றா ரேழைகளை யேமாற்ற
வண்ணமா நூலை வகைவகையாத்—தண்மையிலா
ரன்னதா னஞ்செய்வா ரன்பி னெறிசெல்வர்
பண்ணுநயங் காண்பார் பரிந்து. 62

அருள்வடிவ மானவரை யான்றோரென் றுன்னா
திருண்மனத்தார் குற்ற மிசைப்பா—ரருள்வடிவ
மானார்க் கடையாள மன்னதா னஞ்செய்த
லூனா ரதுசெய்யா ரோர்ந்து. 63

அறத்தான் மறந்தேயு மாமெனுஞ்சொற் றேர்வாய்
திறத்தான் மறஞ்செய்யுந் தீயோ—யறத்தாறு
நின்றனதா னஞ்செய்வாய் நின்பிறப்பு நன்றாகும்
பொன்றுங்கா றுன்படையாய் போற்று. 64

இட்டாருக் கிட்டபல னென்னு மொழியுன்னிச்
சட்டை யகன்முன்ன தானஞ்செய்—யட்ட
வவதான மென்செய்யு மாக்கைவிழும் போது
பவமகல நல்லறத்தைப் பற்று. 65

அரன்பூசைக் கான வலர்பலவுண் டானா
லரன்றான் விரும்புமல ரன்னம்—வரமாகு
மன்னமல ரின்பெருமை யாய்ந்தனதா னந்தன்னைச்
சென்மமறத் தீயோனே செய். 66

பலமலரி னர்ச்சனையாற் பாறாது பாவம்
மலம்போக் கலரன்ன மாகும்—பலபலவாக்
கற்பித் தருச்சிப்பார் காய்பசிக்கிங் கன்னமிடா
வற்பர்செய் பூசையிலென் னாம். 67

அன்ன மலரா லடியாரை யர்ச்சிக்கி
லென்ன வினையு மிரிந்தோடுஞ்—சொன்னேனான்
முக்காலு மாணையிதா மூதறிவோர் கொள்கையிதா
மெக்காலு மிட்டுணெஞ் செண். 68

அன்ன மலரை யறையு மறைமுதன்மற்
றென்ன மலரு மிதற்கொவ்வா—தன்னமலர்
கொண்டன்பர் போற்றுங் குணம்படைத்து நிற்பார்சீர்
கொண்டுளத்திற் போற்றிடுமே கு. 69

சொற்பதமீ யாதந்தோ சோர்வுற்றா ரெண்ணிறந்தோர்
கற்பனையா மென்றுலகைக் காணுமே—லற்புதமா
மிவ்வுடம்பு மூப்பாமு னேழைநெஞ்சே யன்னவறஞ்
செவ்வியதாச் செய்திடநீ தேர். 70

அன்னமிடார் தங்கட் கடையாள முண்டுபல
வன்னமிலா தாடையணி யற்றவராய்ப்—பன்னாட்
பசிதணியா தேங்கிப் பரிதபித்துப் பாரிற்
கசிவினர தங்குறுவார் காண். 71

களைத்துவந்த வேழைகளைக் காயா தழைத்தின்
கிளைத்த முகம்பார்த் தினிதாய்க்—களைப்பகல
நீரன்ன மாயிடினு நீயளிப்பா யென்னெஞ்சே
யீரமென்னும் பல்லுலகு மேய்ந்து. 72

அன்ன மயமே யனைத்துயிரு மென்றிடலா
லன்னப் பெருமைதனை யாருரைப்பா—ரன்னமதே
யாறுருவம் பொன்னுருவ மாகிவிளை யாடுமிதைக்
காணுமதி யோருரைப்பார் காண். 73

நாடரிய நீதிகளை நன்றாய்ப் போதிப்பதனுந்
தேடரிய ஞானமது சேராது—நாடரிய
வன்னமிடு வெற்றவர்கட் கன்னமே ஞானமுறுஞ்
சொன்னே னுணர்ந்து தெளிந்து. 74

அன்னமிடா தோதியறு பாதகமு மானங்க
ளன்ன மிடலவற்றை யாய்ந்தகல—அன்ன
படித்தாலும் பாழே பரன்வேடந் தாங்கி
நடித்தாலு நன்மையிலை நாடு. 75

கருணைசிறி தேனுமிலார் கற்றதனு லென்னாங்
கருணையுளார் கற்றாற் கனிவாங்—கருணையுளா
ரெவ்வுலகு மாய்நின்ற வீசனென நல்லோர்கள்
செவ்வையுறக் கூறுவார் தேர்ந்து. 76

வந்த பொருளை வகையறுத்துப் பங்கிட்டுப்
பந்தமிலார்க் கன்னம் பனித்தீயிற்—றந்தபொரு
ளொன்றுபல வாயிரமா யோங்குமென நூலறையு
மென்றுந் துணையா மிது. 77

வருவாயிற் பாவமது வந்தணுகு மென்றே
வருவாயிற் சோற்றை வறியோர்க்—குருசியுட
னிட்டுண்டா லப்பாவ மேகுமல் லின்பமுறுங்
கட்டுண்ணார் தீப்பிறப்பிற் காண். 78

தன்பொருளா லன்னமிடான் றக்க பொருளிருந்து
மன்னியர்பாற் பொன்னேற் றறஞ்செய்வா—னன்னயமில்
பாவிகளிற் பாவி பசித்தழுவான் பின்னுளி
லேவினைதைச் செய்வா னிசைந்து. 79

பணமிருந்தாற் பாவம் பதியு மதனாற்
பணமுடையார்ப் பார்க்கப் பயமாங்—குணமாப்
பணமுடையார் பத்தருக்குப் பாத்திட்டுப் போற்றில்
மணமுடையா ராவர் மகிழ்ந்து. 80

அன்னக் களைபட்ட வாருமிலா வேழைகளை
யுன்னிநீ யாரென்று னோராமல்—பன்னாள்
பழகினார் போலப் பதமிட்டுக் காத்தா
லழகென்ப ரம்மையப்ப ரார்ந்து. 81

உணவிட்ட வத்தமர்தா மூதியமோ டிங்குப்
பணமுடையா ரென்று பகர்வா—ருணவிடுவீர் [தை
செல்வமில்லா தெப்போதுஞ் சேர்பதென்று புண்ணியத்
தெல்லவர்க்கு மீகைதுணை யென். 82

இட்டுண்ணாச் சம்பத் தழிசெலவுக் காங்கைக்கு
மெட்டிமா மொப்பாவ ரென்றுவீ—ரிட்டமுடன்
முன்னன்ன மிட்ட முறைமையால் வந்ததென
வுன்னியன்ன மேயிடுவீ ரோர்ந்து 83

நோயுடம்பை நம்பாதீர் நொந்தவர்க்குச் சோறிடுமின்
வாயினிக்கப் பேசின் வயிறாறா—மாயுடம்பை
நம்பியறஞ் செய்யீரே னாசமுறு வீர்இன்னா
லெம்பிரான் றன்றுணை யே. 84

அழுதழு தன்ப ரானடியைப் பெற்றார்
பழுதி லடிபெறநாம் பார்க்கின்—வழுவெழனச்
சொல்லா வனக்காமற் சோறிட்டா லேழைகளுக்
கெல்லாச்சம் பத்துமுறு மிங்கு. 85

அழிபொருளைச் சொந்தமென வாழ்ந்துமகிழ் கொள்வீ
ரிழிவோ வறத்தா றியம்பீர்—கழிபொருளை
யுண்ணினைந்து பார்ப்பதுபோ லுண்டியிட்டுப் பார்ப்பீரேல்
புண்ணியமே நற்பணமாய்ப் போம். 86

அன்னமிட்டார் பொன்னடியை யாசையுட னென்றலையிற்
பன்னாள் சுமந்திடவே பட்சமுண்டு—பன்னா
ளுடம்பிருக்கா தாதலினா லுள்ளமட்டு மன்னா
ரடிமலரைத் தாழ்வே னறிந்து. 87

சோறிட்டார் பெற்றபலன் சொல்லரிதா மாராலுஞ்
சோறிட்டுக் காட்டற்கே துய்யநந்தி—மாறி
வசவண்ணா னென்றுலகில் வந்துவாழ்ந் தென்று
மசனமிட்டா ரன்புடையார்க் கார்ந்து. 88

பண்ணா யிருக்குமெனப் பாராதே யிவ்வுடம்பு
சின்னாட்பன் னாளாமோ சீரழிவாய்—முன்னாளி
லன்னமிட்டுச் செல்வ மதிகமாய்ப் பெற்றிருந்து
மன்னமிடா தேனோ வறை. 89

எத்தானத் தானு மிளகாத விம்மனந்தான்
பத்தருணா மூறைற் பளிங்கினைப்போற்—சுத்தமுறு
முத்தருக்காட் பட்டிருக்கு முன்வினையுந் தீர்ந்தொழியுஞ்
சத்தியஞ்சத் தியமிதுவே தான். 90

இட்டுண்ணா மன்பர்த மில்லி னடுநிசியிற்
கெட்டுநொந்து வந்தவர்க்குக் கேடிலனை—யிட்டே
யிருக்கவிடங் காட்டி னினிப்பிறக்கத் தாயின்
கருக்காட்டாக் காட்டுங் கதி. 91

எல்லாப் பொருடமையு மேழைகளுக் கிட்டிளையா
மல்லார் கருணையொடும் வாழ்ந்தவரா—ரெல்லா
ரிளையான் குடிமாற னின்னான் குணங்கொண்
டிளையா தமுதளிப்பா யே. 92

நாவாற் பெரிய நயமில்லா வேழைவந்து
காவா யெனையென்று கால்பணிந்தா—லோவாறு
யார்நீபோ வென்றதட்டி யஞ்சவசைச் சொற்கூறிச்
சீர்குலைவார் மக்களோ செப்பு. 93

படிப்பினாற் பண்டிதராய்ப் பார்புகழப் பெற்றுப்
படிப்பிற் குறையே பகர்வ—ரடிசிலிடார்
நீதிகளைச் சொன்னாலு நீசப் பணப்பேயர்
காதுகளா லேற்பாரோ காண். 94

பணப்பித்துக் கொண்டவர்க்குப் பற்பலசொற் றாலும்
பணப்பித்தா னென்றைப் பழிப்ப—ருணர்வூட்டும்
வித்தையெலா மெம்முன்னே வேகாது வாய்நோகக்
கத்தாதே போவென்பர் காண். 95

பணமிற்கா தேழைகட்குப் பாத்திரமி னென்றால்
பணவாசை யுள்ளார் பரிந்திங்—குணவிட்டுக்
கண்டதென்ன போவென்று கண்டிப்பா ரென்கண்டார்
கண்டதென்ன லாமேயவன் கண். 96

பணமே பரமென்று பல்காலு மேத்திக்
கணமும் பிரியாது காப்பர்—பணமதையே
யெண்ணியெண்ணிப் பார்த்தென்று மேகா திதுவென்று
பண்ணு மறமொன்றும் பார். 97

சத்தியமாத் தன்னைத் தரிசித்த வுத்தமர்கள்
சத்தியமா வேழைகளைத் தாங்காப்பார்—சத்தியமா
வெவ்வுயிருந் தாமாக வெவ்வமறக் கண்டதுண்டேல்
கவ்வையறச் சோறிடுவார் காண். 98

சத்தியனைத் தன்னைத் தற்காத்தல் தர்மமென்பார்
சத்தியந்தான் யாதென்று சாற்றென்றால்—சத்தியர்போ
லுத்திக்கு மாறா வுளறி மனமகிழ்வார்
பத்தியிலாப் பாமரர்தாம் பார். 99

அன்னமிடார் சேம மழியு மரனை
யன்னமிட்டார் சத்தியத்தை யாய்ந்தவர்க—ளன்னமிடற்
கென்ன நிகராகு மேதுரைப்பீ ரன்னமற்றால்
சொன்னவுல குண்டாமோ சொல். 100

அன்னமிடக் கற்றவரே கற்றவர்க ளற்றவருக்
கன்னமிடார் கற்றதனா லாம்பயனென்—பன்னாள்
படித்துப் பலர்க்குரைத்தும் பாங்கில்லை காணீர்
நடிக்காதீர் கற்றவர்போ னன்கு. 101

படிப்பென்ன செய்யும் பணக்காரப் பண்டீர்
படிப்பறுக்கா தேழைப் பசியைப்—படித்ததனாற்
கத்தனடி கண்டதுபோற் காட்டுவீர் வேடத்தாற்
சத்துடைய வன்னமிடீர் சார்ந்து. 102

பணமும் படிப்பும் பரனருளாற் பெற்றும்
பணத்தை மறைத்துப் படிப்பீர்—பணக்காரப்
பண்டிதரே நீங்கள் பதுக்கி னறஞ்செய்யச்
சண்டிகளென் செய்வார்க டாம். 103

பண்டிதப்பேர் பெற்றதனாற் பாவமறு பண்டிதரே
பண்டிதப்பேர் யாரைப் பகட்டுதற்குப்—பண்டிதரே
கல்விசெல்வ முற்றுங் கடும்பசிக்கி டாமலாட்
கொல்லியிலென் பெற்றீர் குணம். 104

புண்ணியத்தாற் செல்வம் பொருந்தியதென் றேயறிந்தும்
புண்ணியஞ்செய் யாமனீ போக்குவதேன் — புண்ணியத்
கல்வியு நற்பொருளுங் கப்பீர மாப்பெற்று [தாற்
மில்லையென் றேசொலுவ தென். 105

ஏழைக் கிரங்குவார்க் கேயிரங்கு மென்சிவன்று
னேழைக் கிரங்கார்க் கிரங்குவனோ—கோழை
யடைத்துயிர்தான் போமு னறஞ்செய்வீ ரன்பாய்
விடைப்பாகன் வீடளிப்பான் மேல். 106

பத்திக்கு வித்தாம் வசவர் பரங்கட்குச்
சித்த மகிழ்ந்து திருவெல்லா—மொத்த
வடிசிலிட்டுக் காட்டி யகமகிழ்ந்தார் முன்னம்
மடிவிட் டிதுசெய்வாய் வந்து. 107

அன்னமுட னானுண் டடியர்வே டப்பூண்டோ
ரென்ன வுரைத்தாலு மேற்காம—லன்னவரை
நாய்போன் மதிக்கனுவு நல்காதே நல்லன்பர்க்
காய்போ லமுதளியன் பால். 108

நினைவில் விளங்குபொரு ணித்தியமென் றெண்ணேல்
கனவொக்கு முட்கண்ணாற் கண்டா—னினைவு
கனவென்று நீகண்டாற் காண்பவைகள் யாவு
மனமயக் கென்றளிப்பாய் மற்று. 109

மனத்தால் விளைகின்ற மாறுப் பிறவி
மனத்தை யறிந்தவர்பான் மன்னு—மனத்தை
யறிந்தார் மயக்கிற்கு ளாழாம லன்னம்
வறியார்க் கிடுவார் மகிழ்ந்து. 100

மோகாதி யல்லலிலே மூழ்கிக் கிடந்தையோ
தேகாதி யுண்மையெனத் தேர்ந்தோநாம்—போகாதி
துன்பஞ் சுகமென்று தோன்றுமட்டு மேழைகளா
மன்பதைகட் கூட்டோ மகிழ்ந்து. 111

அன்பின் பெருக்கதனா லாதிசிவன் வைகுமிட [கேட்
முன்னியறி யாதுவெள்ளி யோங்கலென்பா—ரன்னதைக்
டன்புடையாய் வேறாக வையமுறா தையனிட
மன்னமலை யென்றே யறி. 112

முன்னாளி லீசன் முளரித்தாள் போற்றியதா
லின்னாளி லீசனிடம் யாதென்றே—யன்னமிடு
மன்பர்பாற் கேட்க வரன்றா னிருக்குமிட
மன்னமலை யென்றார்க ளாய்ந்து. 113

வெள்ளி மலைமேல் விளங்குஞ் சிவமென்பார்
துள்ளுமன தென்போற் றுறக்காதார்—வள்ளலர
னன்னமலை மீதே யமர்ந்திருப்பா னாதலினா
லன்னமலை வார்க்கே யளி. 114

வட்டிக்கு வட்டியென வாங்கி முதலுக்கி
ரட்டிப்பாய்ச் சேர்ப்பாய் நயந்தன்ன—மிட்டுண்ணா
தோங்கக் குவித்துவைக்கு முன்னையப் பாழ்ம்பணந்தா
னேங்கியழ வைக்குமுண்மை யெண். 115

வட்டி யதிகமாய் வாங்காதீர் வாங்குவீரேல்
நட்டி யதிகமாய் நண்ணிடுவீர்—வட்டியற்பம்
பெற்றிடினு மன்னம் பிறர்க்கிட் டுவப்பீரேல்
பெற்றிடுவீர் நன்முத்திப் பேறு. 116

ஏழையிடம் வட்டி யிரக்கமின்றி வாங்கிடுவார்
கோழை சளிசிந்தக் கொல்கொலெனப்—பீழைசெயு
மீளைநோய் கொண்டெடுப்பார்க் கேக்கற்று வாடியே
யூளையிட்டே வீவா ருருண்டு. 117

பணத்தி லழுந்திப் பரிதபிக்கு நெஞ்சே
பணத்தைவிட்டுச் செத்தாற் பகைத்துப்—பணத்தைப்
பிணமீது கொட்டுவரோ பேதைமைவிட் டேழைக்
குணவீந் துறுதியுற வோர். 118

நனவில் கனவி னயந்து பணத்தைத்
தினமுஞ்சிந் தித்துத் திளைக்கின்—மனமேமீ
யந்தமிலான் பொன்னடிக்கிங் காளாகி வாதைசெயும்
பந்தமறுத் துய்வதெப்போ பார். 119

சாருந் தருணத்திற் சாற்றென்றால் வாசகத்தை
யேகுமோ காதி லிருளகலச்—சாகுமுட
லூற்றிருக்கும் போதனமீந் தோதுதிரு வாசகத்தைச்
சிற்றம் பலவனருள் சேர். 120

முன்பு ததீசி முனிமுன்பின் பாராம
லென்பளித் துப்பெருமை யேற்றான்மெய்—யன்பர்
பிடியன்ன மிட்டுப் பெருமைபெற்றா ரீதிற்
படியிலுயர் வானதெது பார். 121

பருத்த தலையணைக்குப் பஞ்சிடலை போல
வொருத்தனாய்ச் செல்வனை யுண்டு—பருத்த
வொதிமரம்போ லானு யுறுமிடி யோர்க் கூட்ட
விதிகிழியா முன்னம் விருப்பு. 122

கற்றிருந்துஞ் செல்வங் காத்திருந்து மின்பகலப்
பற்றிருந்து மேழைகளைப் பாராதார்—பற்றின்
மனிதரென வந்து மரப்பாவை போல்வார்
கனிவொடன மீயக் கனிந்து. 123

செல்வமிரண் டும்படைத்துந் தீனர்பா லன்பென்ப
தில்லையத னாலன்ன மீயாமற்—செல்வ
மிடிக்கிவைத் தேமாப்புற் றேகலினு மென்று
மிடிக்கியைந் தார்க்கிடலே மேல். 124

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டி யபிநயித்துக் கன்மனத்தா—லேட்டிலுள்ள
வித்தையெலாங் காட்டி வெறும்வாயாற் பந்தலிட்
டெத்தா தனமிடவே யென். 125

அடியர்நா னென்பா ரறிவணுவு மில்லார்
மிடியருக் கன்னமிட மேவார்—குடியரைப்போற்
கொள்ளைகொள்ளை யாய்ப்பேசிக் கும்பிட்டுங் கேத்திடுவா
ரெள்ளளவே னும்பயனங் கேது. 126

உள்ளத் தொளிர்சிவத்தை யோராம லூரூராய்
வள்ளறனைத் தேடி வருந்துவா—ருள்ளம்போ
லள்ளக் குறையாத வாஸ்தியுற்று மன்னமிடா
ருள்ளபொரு ளாற்பயனெ னேது. 127

காலைமுதன் மாலைவரை கால்கடுக்க வேயலைவார்
பாலை நிலம்புகுந்த பட்சியைப்போற்—கோலைப்
பிடிக்களவுந் துக்கமுற்றுப் பேராசை யுற்றுற்
பிடிச்சோ றிடுவதென்று பேசு. 128

சங்கையறக் கற்றாலுஞ் சாந்தகுணம் பெற்றாலும்
பங்கமற விட்டுண்ணும் பாபரே—துங்கமறை
நல்க வுரைத்திருக்கு ஞாயந் தனையுணர்ந்து
செல்காமு னன்னமிடுற் சீர். 129

வீட்டிற் கழகு விருந்தினருக் கிட்டுண்ணல்
பாட்டிற் கழகினிய பண்ணாகு—நாட்டமுறு
ஞானந் தனக்கழகு நற்சாந்தி யன்னமிட
ரூனந் தனக்கழகு தான். 130

விரைத்தமுளை நெல்லெடுத்து வீழரிசி யாக்கி
யரையிரவில் வந்தவரற் கார—விரைவா
விளையான் குடிமாற னின்பொடமு தீந்தா
ரிளையா திளைத்தவர்கட் கீ. 131

இளையா தெவர்க்குமன மிட்டே யிளைத்த
விளையான் குடிமாற ரில்லிற்—களையான
பாதி யிரவிற் பாற்கமுதீந் துய்ந்தமைநோக்
கேதிலருக் கன்னமிட வெண். 132

நேசரென வந்தோர் நெடுங்காலங் காத்திருக்கப்
பாசமுளார் போலப் பசப்பியே—நேசநீர்
வந்துநெடு நாழி வறிதிருந்தீ ரில்லென்னு
மந்தகனே யன்னமிட வாய். 133

காணவந்த நட்பினரைக் காக்கவைத் தன்னமிடா
தாணமுறப் பேசி யழகாகக்—கோணமனம்
போய்வருவீ ரென்றுரைத்துப் பொற்பாக வுண்டுவைக்கும்
பேய்மகனே யன்னமிடப் பேண். 134

சிநேகரெனப் பல்லிடத்துஞ் செப்புகின்ற செல்வர்
சிநேகரோர் கால்வந்தாற் சிந்தித்—தநேகமா
நல்வார்த்தை கூறியே நட்பினரைச் சென்மினென்பார்
கல்லொத்த நெஞ்சத்தாற் காண். 135

இல்லத் திருந்து மியற்றாரே வில்லறத்தை
யில்லமஃ தாகா திடுகாடாஞ்—செல்வரே
யென்சொல்வீ ரீதுக் கெடுத்துரைமின் ஞாயமுண்டேல்
வன்சொலுடன் வம்பகற்றி வந்து. 136

ஆரு மனவிருத்தி யன்னமிடி லேழைகளுக்
கூறுமுற வாகுமிவ் வுண்மைதனைச்—சீருற்ற
வாரணங்க ளாகமங்க ளத்தனருள் கீதையுமே
பூரணமாச் சொல்லும் புகழ்ந்து. 137

கல்விசெல்வப் பாசத்தாற் கட்டுண்டு கண்ணின்றிப்
பல்லளற்றி லுற்றந்தோ பாழாவான்—பொல்லா
வரவக் கொடிமன்ன னாகலினா லன்ன
மிரவலருக் கீந்துய்ய வெண். 138

அடும்பொருளை வேண்டி யலைகின்றா யந்தோ
கொடும்பிறப்பை யெவ்வாறு கொல்வாய்—நடுநிலையைப்
பெற்றுய்ய வேண்டினெஞ்சே பேதைகளுக் கன்னமிடக்
கற்றிடுவாய் நாளுங் கசிந்து. 139

வேசி மனமும் வெறுக்கையோன் றன்மனமுங்
காசி தனையே கருதுதல்போ—லாசி
லருளுடையார் நாளு மனமெளியோர்க் கீயக்
கருதிடுவா ரென்றே கழறு. 140

வேண்டியபோ தெல்லாம் விதம்விதமா வுண்டாலும்
வேண்டியுன்பால் வந்தவர்க்கு வெட்டிச்சோ—றுண்டகையே
யிட்டாலும் புண்ணியமே யெய்துநீ மாறாமற்
றிட்டவழி யீதேனுந் தேர். 141

அண்டைவீட் டுச்சடங்கி லானமட்டுங் கைநீட்டிக்
கொண்டவற்கு மற்றுமுன் கும்பலுக்குந்—தண்டச்சோ
றிட்டிட்டுப் பேரொடுக்கு மெந்திழையுன் சோறுபிடி
யிட்டிடலே யேற்பார்க் கிதம். 142

இலக்கணவி லக்கியங்க ளென்னுஞ்சோற் றின்முன்
மலக்குடல்யா னென்ன மகிழ்வாய்—இலக்கணத்தைக்
கற்றார்க் கழகு கனவனதா னஞ்செய்த
லற்றார்க் குணவீ யறிந்து. 143

பெண்டுபிள்ளை கட்குப் பெரும்பொருளை யீட்டிவைத்திங்
கண்டிவந்த வேழைகளுக் கன்னமிடாய்—பெண்டுபிள்ளை
சந்தையினிற் கூட்டமெனச் சார்ந்துவரு மேழைகட்குப்
பந்தமற வன்னமிடப் பார். 144

குடும்பம்பொய்க் கூட்டமெனக் கொள்ளறிஞ ரென்று
மிடும்பை தரும்பிறவி யெய்தார்—குடும்பத்தை
மெய்யென்று நம்பி மெலிந்தோர்க் கனமளியார்
நொய்ய பிறப்புறுவார் நொந்து. 145

பயாஸ்கோப்புச் சாலம்போற் பார்த்துலக வாழ்வைத்
தயாவொடனம் யார்க்குந் தருவாய்—பயாஸ்கோப்புச்
சாலமது மெய்யானாற் சத்தியமா மிவ்வாழ்வு
கோலமறு நெஞ்சினனே கூறு. 146

தோன்மினுக் கின்பத்தாற் சோர்ந்தீர்க ளன்னமிட
தோன்மினுக் கோகிணைஞ்சீழ் சோதிப்பீர்—தோன்மினுக்காற்
கெட்டவர்கள் கோடியுண்டு கேடிலறஞ் செய்யாமற்
பட்டவர்கள் கோடி பதைத்து. 147

ஆலமன நீசிகளுக் காட்பட்டிங் கன்னமிடாத்
தால மதிகொண்டு துன்புறுவாய்—காலனுக்கே
யாட்பட்டு நிற்பதற்கோ வையோ பொருளீட்டல்
நாட்பட் டிருப்பதற்கோ நாட்டு. 148

சாமியாஞ் சற்குரவன் றந்தவொரு தண்ணருளாற்
காமியமற் றன்னமிடக் கற்பித்தே—னேமிமனத்
தின்வயமா காதெளிவோர்க் கின்சொலுட னன்னமிட்டார்
வன்னமனூர் பற்றறுப்பார் வாழ்ந்து. 149

பண்டிதரும் பாமரரும் பார்த்துய்வா ரிந்நூலைச்
சண்டியா யுள்ளார் சழக்குரைப்பார்—பண்டிதமே
பற்றற்றார்க் கீந்து படித்துரைத்தெல் லோர்க்குமா
னற்றா ளடைமி னயந்து. 150

வாழி.

அன்னமிடு வாருநீ றக்கணிந் தைந்தெழுத்து
முன்னிச் செபிக்கு முயர்ந்தாரும்—பொன்னையு
வென்பரம வாரியனு மாரியனு மிந்நாலு
பன்னாளும் வாழ்கவிப் பார்.

அன்னதான விளக்கம்

சம்பூரணம்

சுபம்.

# புத்தக விளம்பரம்.

| | | |
|---|---|---|
| போதவிளக்கம் | ரூ 0 | 2 |
| சொரூபாநந்த விளக்கம் | 0 | 1 |
| அநுபவாநந்த விளக்கம் | 0 | 1 |
| சாமிவிளக்கம் | 0 | 1 |
| சர்வதரிசன சங்கிரகம் | 2 | 8 |
| சிவமஹிம்ந ஸ்தோத்திரம் | 0 | 1 |
| ரிபுகீதைத்திரட்டு-குறிப்புரை | 1 | 0 |
| பஞ்சதசப் பிரகரணம்-மூலம் | 0 | 10 |
| விவேகாநந்தர் கடிதங்கள் | 0 | 4 |
| கந்தரலங்காரம் உரை | 0 | 5 |
| கந்தரந்தாதி உரை | 0 | 5 |
| ஞானசாதக சகாயம் | 0 | 12 |
| பிரபுலிங்கலீலை வசனம் | 0 | 12 |
| அரிச்சந்திரபுராண வசனம் | 1 | 8 |
| தாயுமானவர்பாடல்உரையுடன் | 4 | 0 |
| பிரபோதசந்திரோதய வசனம் | 1 | 0 |
| வேதப்பொருள் விளக்கம் | 0 | 12 |
| வேதாந்த மநசிந்தாமணி | 4 | 0 |
| மனோவசிய தத்துவம் | 2 | 0 |
| ஐரோப்பா யுத்தம் 100 படம் | 1 | 8 |
| சதகத்திரட்டு முதல்பாகம் | 0 | 9 |
| மேற்படி 2-ம் பாகம் | 1 | 0 |
| பெர்சனல்மாக்னெடிசம் | 2 | 0 |
| குமாரதேவர் 16 சாஸ்திரம் | 0 | 10 |
| பிரபுலிங்கலீலை உரையுடன் | 2 | 8 |
| ஆத்திசூடிபுராணம் உரையுடன் | 2 | 0 |
| கந்தரநுபூதி உரையுடன் | 0 | 6 |
| கல்லாடம் - மூலமும்-உரையும் | 3 | 0 |
| ஆத்மபோதமும்-தத்துவபோதமும் | 0 | 5 |
| பஞ்சதசப் பிரகரணம் - வினா-விடை | 1 | 0 |
| அறிவாநந்த சித்தியார் - சுத்தபாடம் | 0 | 4 |
| பெரியபுராண திருவிளையாடல் புராண வசனச் சுருக்கம்-பாக்கெட் அளவு | 1 | 4 |
| திருவள்ளுவர் தோத்திரவிளக்கம் | 0 | 1 |
| கற்புவிளக்கம் | 0 | 3 |
| அன்னதான விளக்கம் | 0 | 3 |
| மனத்திற்குறுத்து மதிவிளக்கம் | 0 | 4 |
| சித்தாந்த பிந்து (ராப்பர்) | 0 | 8 |
| வேதாந்த பரிபாஷை | 0 | 10 |
| விவேகசிந்தாமணி உரை | 0 | 12 |
| விவேக சூடாமணி | 0 | 8 |
| தேவார திருவாசகத் திரட்டு | 0 | 8 |
| குமாரதேவர் 16 சாஸ்திரம் | 0 | 10 |
| அறப்பளீசுரர் சதகம் உரை | 0 | 1 |
| தேசிங்குராஜன்—வசனம் | 0 | 8 |
| மெஸ்மரிச பாடங்கள் | 2 | 0 |
| மகாராஜா துறவு வசனம் | 0 | 3 |
| ஞானவாசிட்ட வசனம் | 1 | 8 |
| வியாசதாத்பர்ய நிர்ணயம் | 0 | 8 |
| கைவல்யமூலம் பாகெட்அளவு | 0 | 3 |
| சிவ பஞ்சாக்ஷர பாஷ்யம் | 0 | 4 |
| அருணாசல புராணவசனம் | 1 | 0 |
| வேதாந்த சூளாமணி மூலம் | 0 | $2\frac{1}{2}$ |
| ஔவைக்குறள்-உரையுடன் | 0 | 8 |
| ஷை மூலம் | 0 | 2 |
| அகம்புற ஆராய்ச்சி விளக்கம் | 1 | 4 |
| ஆத்மபுராணம் (வசனம்) | 8 | 0 |
| திருப்போரூர் சந்நிதி முறை | 1 | 0 |
| சஷ்டிகவசம் உரையுடன் | 0 | 5 |
| பர்த்ருஹரி வைராக்ய சதகம் | 0 | 3 |
| கிறிஸ்துமதகண்டனத்திரட்டு | 1 | 8 |
| வசீகரவிர்த்திபோதினி | 0 | 8 |
| கட்டளைப் பிரபந்தம் | 0 | 8 |
| பக்தமாலா வசனம் | 3 | 8 |
| இந்துபைபில் | 1 | 12 |

பதினெண்சித்தர் ஞானக்கோவை-3-பாகம் 1 8 சுவாசமே உயிர் 1
சங்கரத் துவேஷியாரின் வாய்ப் பூட்டு 0 6 சித்தர் களஞ்சியம் 1
ஆத்திசூடி பாகியார்த்தமும் ஆந்தரார்த்தமும்0 8 மானிட வசியம் 2
பாட்டியற் கொத்து-உரையுடன் 0 6 விவேகாநந்தர் }
தருக்காமிர்தமும் பிரஸ்தான பேதமும் 0 8 இராஜயோகம் } 0
தோடகமென்னும் - வேதசார சமுத்தாணம்0 4 தத்துவதர்சனி 0 1
வேதாந்தசாஸ்திர ரத்னாவலி (பாக்கெட் அளவு) 1 0 ஞானதர்சனி 0
தர்க்கபரிபாஷை (விரிவான குறிப்புரையுடன்)1 0 பக்தியோகம் 0
விசாரசாகரம் 3 4 ஒழிவி லொடுக்கம் 1 0 வேதாந்தடிண்டிமம்0
நியாயப்பிரகாசம் 4 0 ஆனந்தராமாயணம்5 0 இன்பரசக்கோவை 1
திருவாசகம்-உரை 2 8 விவேகானந்தவிஜயம்1-4 பகவத்கீதைஉரை 2
பகவத்கீதை-வசனம்1 4 முக்திசோபானம் 0 8 தத்துவாநுசந்தானம்2
வள்ளலார்சாஸ்திரம்1 8 விநோதரசமஞ்சரி 1 2 கைவல்யம்-வசனம் 0
மதவிருக்ஷம் 1 12 பாகவதத்திரட்டு 0 6 நைஷ்கர்மியசித்தி 0
பழமொழிஅகராதி2 0 சூதசங்கிதைவசனம்1 0 திவ்யதேசயாத்திரை2
புனிதவதி 0 2 வேதாந்த சஞ்ஞா 0 2 பிரஹ்மானந்தலகிரி0
சூட்சும கைத்தொழில் சாஸ்திரம் 174 வித்தைகள் (2 - ம் பதிப்பு) 0 1
வாக்கிய சுதையென்னும் திருக்குறுத் திருசிய விவேகம் 0
சிவப்பிரகாசப் - பெருந்திரட்டு - குறுந்திரட்டுடன் 3
வேதாந்தசாரம் - சமஸ்கிருத மொழிபெயர்ப்பு - வசனம் 0 1
நாராஜீவவாதக் கட்டளை (விரிவான குறிப்புரையுடன்) 3-ம் பதிப்பு 0
ஸ்ரீபஞ்சதசி (சமஸ்கிருதமூலமும் தமிழ் உரையும்) 2 வால்யம் 10
வேதாந்த சூளாமணி (மூலமும் விரிவுரையும்) 1
ஸ்ரீபக்த லீலாம்ருத வசனம் 82 பகதர்களின் சரித்திரம் 3
திருவெங்கைக்கோவை மூலமும் - உரையும் 2
திருவாசகம் இது பிழையறப்பரிசோதித்தது உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது-பாக்கெட் அளவு காலிக்கோ } 0 1
திருக்குறள் - பரிமேலழகருரை-தெளிபொருள் விளக்கம், கருத்துரை, குறிப்புரை இங்கிலீஷ் மொழிபெயர்ப்புடன்-திருத்தமான இரண்டாம் பதிப்பு } 7
ஸ்ரீ விருத்திப் பிரபாகரம்(விசாரசாகரம் நூலாசிரியராகிய ஸ்ரீசாது நிச்சலதாசரவர்கள் ஹிந்திபாஷையி லியற்றியருளிய அரிய வேதாந்தநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு } 4
சச்சிதானந்தசிவம் குரு சிஷ்ய சம்வாதம்-திருத்தமான 2-ம்பதிப்பு 0 14

இந்த ஆபீசில் எல்லாவிதமான சாஸ்திரங்களும் நாவல்களும் கிடைக்கும்.

சச்சிதானந்தம் பிரஸ், கோமளேசுவரன்பேட்டை, சென்னை.